# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report



## 2017

## සංවර්ධන කාර්යභාර අමාත්‍යාංශය
## அபிவிருத்தி பணிகள் அமைச்சு
## MINISTY OF DEVELOPMENT ASSIGNMENTS

# அபிவிருத்திக் கடமைப் பொறுப்புக்கள் அமைச்சு

## செயலாற்றுகை அறிக்கை

## 2017

*தொலை நோக்கு:*

***நிலைத்துநிற்கும் முறையில் பெறுபேறுகள் வழங்கப்படுவதில் கவனம் செலுத்தி தேசிய ஆற்றல்களைப் பலப்படுத்துவதில் ஒரு உயிரோட்டம் மிக்க பங்காளராகத் திகழ்தல்.***

*எமது பணி*

***நாட்டின் அபிவிருத்தி இலக்குகள்/நோக்கங்களின் பெறுபேறுகளையும் அடைவுகளையும் உறுதிப்படுத்துவதற்கான தேசிய கவனக் குவிப்பு நிலையமொன்றாகத் தொழிற்படுதல்.***

## உள்ளடக்கம்

1. அறிமுகம் 3-4

1.1. அமைச்சின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள்

1.2. இவ் அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள்

1.3. நடைமுறைப்படுத்தப்பட வேண்டி நியதிச் சட்டங்கள்

2. அமைச்சின் செயலாற்றுகை (2017.06.14 – 2017.10.31) 5-9

2.1. வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

2.2. நிர்வாகப் பிரிவு

2.3. நிதிப்பிரிவு

3. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயலாற்றுகை 12

செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம் (2017.01.01 – 2017.09.30) பின்னிணைப்பு I

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை (2017.01.01 – 2017.09.30) பின்னிணைப்பு II

நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் (மிலோதா) (2017.01.01 – 2017.09.30) பின்னிணைப்பு III

# 1. அறிமுகம்

**அபிவிருத்திக் கடமைப் பொறுப்புக்கள் அமைச்சு, இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2017.06.09 ஆந் திகதிய 2022/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தாபிக்கப்பட்டது. இந்த அமைச்சு கௌரவ திலக் மாரப்பன, ஜ.ச. அவர்களின் தலைமயில் இயங்குகின்றது. இந்த அமைச்சின் தொழிற்பாடுகள் 2017.06.14 ஆந் திகதி 5 ஆம் மாடி, பழைய டைம்ஸ் கட்டடம், பிரிஸ்ரல் வீதி, கொழும்பு 01 என்ற முகவரியைத் தற்காலிக இடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன.**

## 1.1. அமைச்சின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள்

1. தேசிய மற்றம் மாகாண மட்டங்களில் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல், வழிநடாத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. அபிவிருத்திச் செயற்திட்டங்களின் பயனுறுதி வாய்ந்த அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய ஏனைய அமைச்சுகளுடான ஒருங்கிணைப்பு.

3. அபிவிருத்திச் செயற்திட்டங்கள்ள் தொடர்பான பொருளாதார முகாமைக்கான அமைச்சரவைக் குழுவுடன் தொடர்புகளைப் பேணுதல்

4. தேசிய கொள்கைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சருக்கு உதவி செய்தல

5. செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, நிதியியல் கற்கைகள் கல்விக்கழகம் என்பவற்றின் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களும்.

6. செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் என்பவற்ற மேற்பார்வை செய்தல்.

## 1.2 இவ் அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள்

1. செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம்
2. ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை
3. நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் (மிலோதா)

## 1.3 நடைமுறைப்படுத்தப்பட வேண்டி நியதிச் சட்டங்கள்

1980 ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்

1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்.

அமைச்சினதும் அதன் நிறுவனங்களினதும் தொழிற்பாடுளுடனும் கடமைகளுடனும் தொடர்புடைய அனைத்துச் சட்டவாக்கங்களும்.

# 02. அமைச்சின் செயலாற்றுகை

2017 ஜூன் மாதத்தில் இவ் அமைச்சு தாபிக்கப்பட்டதிலிருந்து, அதனது பூர்வாங்க மட்டத்தில் இருப்பதனால், அது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றும் அதேவேளை தனது ஆற்றலை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதிக, நிதியியல் மற்றும் மனித வளங்களைப் பெறுவதற்குக் கடுமையாக முயற்சி செய்து வருகின்றது. அதற்கிணங்க, இவ் அமைச்சின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளினதும் செயலாற்றுகை கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

## 2.1. வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

1. செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் (மிலோதா) ஆகிய நிறுவனங்களின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் விளக்த்தைப் பெற்று திட்டமிட்ட இலக்குகளை அடைவதற்கு அவற்றுக்கு வழிகாட்டுவதற்காக பூர்வாங்கக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன..

2. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுயம் கலந்துரையாடல்களையும் செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் (மிலோதா) ஆகிய நிறுவனங்களின் தொழிற்பாடுகளையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தமை.

3. அனைத்து நிரல் அமைச்சுக்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் செயலாற்றுகை அடங்கிய இரண்டாம் காலாண்டுடன் தொடர்புடைய பகுப்பாய்வுடன் ஒருங்கிணைந்த முன்னேற்ற அறிக்கையை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தமை.

4. பொருளாதார முகாமை தொடர்பான அமைச்சரவைக் குழு, பொருளாதார முகாமை தொடர்பான உத்தியோகபூர்வக் குழு என்வற்றுக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தமையும் அபிவிருத்தி விடயப் பொறுப்புக்கள் தொடர்பில் அக்குழுக்களால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க களச் சோதனைகளையும் கூட்டங்களை நடாத்தியமை.

5. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் முகவரகம், அனைத்துப் பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுடன் இணைந்து சமூக நலனோம்பல் தரவுப் பகுப்பாய்வுத் தளத்தை மீளாய்வு செய்து, இற்றைப்படுத்தி சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

6. 2015 முதல் 2017 செப்டெம்பர் இறுதி வரையில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களின் அமுலாக்கம், இரண்டு வருட துரித நிகழ்ச்சி என்ற புதிய வர்த்தகக் கொள்கையின் அமுலாக்கம் என்பவற்றின் அமுலாக்க முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

7. கௌர பாராளுமன்ற உறுப்பினர்களால் கேட்கப்பட்ட அபிவிருத்திக் கடமைப் பொறுப்புக்கள் அமைச்சின் நோக்கெல்லையுடன் தொடர்புடைய கேள்விகள் தொடர்பான பதில்களை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தமை.

8. பல்வேற தரப்புக்களால் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் அபிவிருத்திக் கடமைப் பொறுப்புக்கள் கௌரவ அமைச்சரை ஒரு தரப்பாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தலும் ஒருங்கிணைப்புச் செய்தமையும்.

9. பொருளாதார அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக குழு, பொது மனுக்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணைக்குழு என்பவற்றுக்கு இவ் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ள விடயங்களுடன் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பித்தலும் ஒருங்கிணைப்புச் செய்தமையும்.

## 2.2 நிர்வாகப் பிரிவு

இந்த அமைச்சின் நிர்வாகப் பிரிவு அமைச்சின் உள்ளகத் தாபன விடயங்கள் மறும் முழுப் பதவியணியினதும் நிர்வாக விடயங்கள் ஆகிய அனைத்துக்கும் பொறுப்பாக உள்ளது. அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள செயற்திட்ட முகாமை மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, மிலோதா- நிதிக் கற்கைகள் கல்விக்கழகம் என்பவற்றுடன் தொடர்புடைய நிர்வாகம் தொடர்பான அனைத்து விடயங்களும் இப்பிரிவினால ஒருங்கிணைப்புச் செய்யப்படுகின்றன.

இவை தவிர, சீரான தொழிற்பாட்டையும் ஒத்துழைக்கும் பணிச் சூழலையும் உறுதிப்படுத்துவதற்காக அமைச்சின் ஆரம்ப தாபன வேலைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த புதிய அமைச்சின் கீழ் உள்ள நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் பூர்வாங்கச் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- அமைச்சின் மனித வளத் தேவைகளை மதிப்பீடு செய்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல்
- இடமாற்றங்கள் மூலம் பதவியணியினரைப் பெறுதலும் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் சிற்றூழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தலும்.
- குத்தகை முறையின் கீழ் புதிய கட்டடமொன்றைப் பெற்று, புதிய கட்டடத்தைப் பகுதிகளாகப் பிரித்தல் மற்றும் தளபாடங்களையும் அலுவலக உபகரணங்களையும் பெறுவதற்கான பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பெறுதல்.

**2017.10.31 இல் உள்ளவாறான பதவியணி விபரங்கள்**

| | **அனுமதிக்கப்பட்ட பதவியணி** | **தற்போதுள்ள ஊழியர் தொகை** | **பதவி வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| *நிரந்தர* | | | |
| சிரேஷ்ட மட்டம் (உதவிப் பணிப்பாளர் மற்றும் அதற்கு மேல்) | 14 | 08 | 06 |
| மூன்றாம்நிலை (நிர்வாக உத்யோகத்தர்/தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்) | 02 | - | 02 |
| இடைநிலை (அபிவிருத்தி உத்தியோகத்தர்/அரச முகாமைத்துவ உதவியாளர்/தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர்) | 18 | 02 | 16 |
| ஆரம்பநிலை (சாரதி/அலுவலக உதவியாளர்) | 14 | 09 | 05 |
| *தற்காலிக* | | | |
| சிரேஷ்ட நிலை (ஒருங்கிணைப்புச் செயலாளர்) | 01 | 01 | - |
| **மொத்தம்** | **49** | **20** | **29** |

## 2.3 நிதிப்பிரிவு

### நிதிப் பிரிவின் தொனிப்பொருள்கள்

உன்னத சேவையின் ஊடாக திருப்பதியடைந்த வாடிக்கையாளர்கள்

### குறிக்கோள்கள்

- நிதி அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- நிதி முகாமைக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப மென்பொருட்களை அறிமுகம் செய்வதன் மூலம் கொடுப்பனவுகளை விரைவாகச் செலுத்துதல்.
- வருடாந்த வரவு செலவுத் திட்ட்த ஒதுக்கீடுகளை சிக்கனமாமன முறையில் பயன்படுத்துதல்
- பிழைகளைய்ு தவறுகளையும் இல்லாதொழித்தல்
- சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

### தொழிற்பாடுகள்

- வரவு செலவுத் திட்டம் தொடர்பான நிதித் திட்டத்தையும் கட்டுபாட்டையும் தயாரித்தல்.
- சட்ட ஏற்பாடுகள், விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், SLIPSAS மற்றும் நிதி முகாமை தொடர்பான சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- சொத்துக்களின் பெறுகை, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்வற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- வருடாந்த நிதி அறிக்கைகள், முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் என்பவற்றைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.
- குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குள் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பி கணக்குகளைப் பேணி வருதலும் வருடாந்த கணக்கிணக்க அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்.
- நிதிச் செயறபாடுளுடன் தொடர்புடைய செயற்முறைகளை ஒழுநக்குவதற்காகவும் தீர்மானம் எடுத்தலுக்கு உதவுவதற்காகவும் தரவுத் தளங்களைப் பேணி வருதலும் வேலைக் கையேடுகளையும் சரிபார்ப்புப் பட்டியல்களையும் நியமப் படிவங்களையும் தயாரித்தலும்.

பெறுமானங்கள்

- வினைத்திறன்
- பயனுறுதித் தன்மை
- குழு உணர்வு
- வாடிக்கையாளரை மதித்தல்
- திறந்த மனப்பான்மை மற்றும் வெளிப்படைத்தன்மை
- துல்லியத்தன்மை

## 2017.10.30 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம்

| தலைப்பு | நிகழ்ச்சி | செயற்திட்டம் | உப | விபரம் | மதிப்பீடு 2017 (ரூபா) | நிதிச் செலவினம் (ரூபா) | மீதி (ரூபா) | செலவின வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 280 | 02 | 01 | 07 | **நடைமுறைச் செயற்பாடுகள்** கௌரவ அமைச்சரின் அலுவலகம் | | | | |
| | | | | i. மீளெழும் செலவுகள் | 10,345,000 | 7,274,993 | 3,070,007 | 70% |
| 280 | 02 | 01 | 07 | ii. மூலதனச் செலவினம் | 59,800,000 | 59,800,000 | 0.00 | 100% |
| | | | | **உப மொத்தம்** | **70,145,000** | **67,074,993** | **3,070,007** | **95%** |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| 280 | 02 | 01 | 07 | **பொது நிர்வாகம்** | | | | |
| | | | | i. மீளெழும் செலவுகள் | 14,655,000 | 5,798,081 | 8,856,919 | 39.5% |
| 280 | 02 | 01 | 07 | ii. மூலதனச் செலவினம் | 5,000,000 | 1,127,885 | 3,872,115 | 22.5% |
| | | | | **உப மொத்தம்** | **19,655,000** | **6,925,966** | **12,729,034** | **35.2%** |
| | | | | | | | | |
| | | | | மீளெழும் செலவுகள் | **25,000,000** | **13,073,074** | **11,926,926** | **52.2%** |
| | | | | மூலதனச் செலவினம் | **64,800,000** | **60,927,885** | **3,872,115** | **94%** |
| | | | | **இறுதிக் கூட்டுத்தொகை** | **89,800,000** | **74,000,959** | **14,999,041** | **82.4%** |

## அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயலாற்றுகை

1. **செயற்திட்ட முகாமைக் கண்காணிப்புத் திணைக்களம் - பின்னிணைப்பு I**
2. **ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை– பின்னிணைப்பு II**
3. **நிதிக் கற்கைகளுக்கான கல்விக்கழகம் (மிலோதா)– பின்னிணைப்பு III**

**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

**Department of Project Management and Monitoring**

## பொருளடக்கம்


1. அறிமுகம் ………………………………………………………………………….. 01

2. நிறுவன கட்டமைப்பு …………………………………………………………… 02

3. வரவு செலவுத்திட்ட தகவல்கள் …………………………………………….... 02

4. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் ………..……. 03

5. விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல் ………..……….. 04

6. தேசிய மதிப்பீட்டு கொள்கையை உருவாக்குதல் ………………………….... 05

7. கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல் …………………………………... 05

8. கொள்கை வழிகாட்டல்களின் அமுலாக்கல்
முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல் ………………………………………………. 05

9. பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அரச உடைமை
கம்பனிகளை வசதிப்படுத்தல் ...…………………………………………………. 07

10. DCB, RIDP மற்றும் SP நிகழ்ச்சித் திட்டங்களின்
அமுல்படுத்தல்களை கண்காணித்தல் ……………………………………..……. 08

11. அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின்
செயற்றிறன் அறிக்கைகளை வெளியிடல் ………………………………………….. 09

12. அலுவலர்களுக்கான பயிற்சியளிப்பு மற்றும் திறன் விருத்தி …………………...…. 10

## அறிமுகம்

துரித அபிவிருத்தி முயற்ச்சியில், முதலீட்டு உபாயத்திற்கு அமைவாக பாரியளவிலான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உரிய நேரத்திலும் உரிய கிரயத்திலும் அமுல்படுத்தப்படுவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. மேலும் கருத்திட்ட அமுலாக்கத்தின் போது ஏற்படுகின்ற தடைகளை அகற்றுவதற்கு உரிய நேரத்தில் இடையீடுகளை மேற்கொள்ளல் அவசியம். தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அறிக்கையிடல் அவசியமாகும். பொது நிதியியல் முகாமைத்துவத்தில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு முக்கியத்துவம் பெறுவதுடன் முதலீடுகள் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்கின்றது. இவ்விலக்குகளை அடைந்துகொள்வதற்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது சுமுகமான துரித அபிவிருத்திக்கான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளைச் செய்கின்றது.

### தொலைநோக்கு

“உற்பத்தித்திறன் மிக்க அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக முதன்மை பங்காளராதல்”

### செயற்பணி

“பெறுபேறுகளை உறுதி செய்யும் பொருட்டு அரசின் அனைத்து அபிவிருத்தி கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணித்தலும் அத்துடன் மதிப்பீட்டு கேந்திர நிலையமாகவும் செயற்படுதல்”

### பிரதான செயற்பாடுகள்

- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல்.
- தேவையின் அடிப்படையில் கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடல் செயன்முறைக்குத் தேவையான பின்னூட்டல்களை வழங்கல்
- கொள்கை வழிகாட்டல்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல்
- நிரல் அமைச்சினை ப.வ.செ.தி மற்றும் கி.உ.அ.தி ஆகியவற்றை சுமுகமாக அமுல்படுத்துவதனை வசதிப்படுத்தல்
- அரச உடைமைக் கம்பனிகளின் பெறுபேற்று விளைவுகளை வசதிப்படுத்தல்.
- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை சுமுகமாகவும் துரிதகதியிலும் அமுல்படுத்தி, அபிவிருத்தி பயனுறுதியின் இலக்குகளை அடையச் செய்வதில் இத்திணைக்களமானது, பல்வேறுபட்ட கண்காணிப்பு முறைகளைக் கையாள்வதன் மூலம் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

.

## நிறுவன கட்டமைப்பு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் மூன்று மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் 09 முக்கிய குழுக்களையும் 02 பிரிவுகளையும் கொண்டு இயங்கி வருகிறது. அப் பிரிவுகளாவன: -

### திணைக்களத்தின் துறைகள்

i. மனித வளங்கள்
ii. சமூக மற்றும் சமயங்கள்
iii. விவசாயம்
iv. பிராந்திய அபிவிருத்தி
v. பொது பயன்பாடு
vi. போக்குவரத்து
vii. நல்லாட்சி
viii. சுற்றாடல்
ix. கைத்தொழில் மற்றும் நிதி

### திணைக்களத்தின் பிரிவுகள்

i. நிர்வாகம்
ii. நிதி

மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் நிதி மற்றும் நிருவாகப் பிரிவு திணைக்கத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உதவிச் சேவைகளை வழங்குவதுடன் ஏனைய பிரிவுகள் அனைத்தும் தொழிநுட்ப பிரிவுகளாக நேரடியாக அபிவிருத்தி கருத்திட்டங்களில் கண்காணிப்பு தொடர்பிலான பணிகளில் ஈடுபடுகின்றன. (நிறுவன கட்டமைப்பு - *இணைப்பு I*)

## திணைக்களத்தின் ஆளணி விபரம்

திணைக்களத்தின் ஆளணி விபரம் 31. 12. 2017 இல் பின்வருமாறு: -

**அட்டவணை இல. – 01: ஆளணி விபரம்**

| ஆளணி வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுத்தர அலுவலர்கள் | 36 | 24 | 12 |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 04 | 02 | 02 |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 47 | 23 | 24 |
| ஆரம்ப நிலை அலுவலர்கள் | 21 | 15 | 06 |
| **Total** | **108** | **64** | **44** |

## வரவு செலவுத்திட்ட தகவல்கள்

2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட செலவுகள் மதிப்பீடு மற்றும் வருடாந்த செலவுகள் வரைபடம் இல. 01 மற்றும் அட்டவணை இல. 02 ஊடாக முன்வைக்கப்படுகிறது. வரவுசெலவு தகவல்கள் பற்றிய விபரமான அறிக்கையொன்று *இணைப்பு இல. II* ஊடாக முன் வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. – 02: வரவு செலவுத் திட்ட தகவல்- 2017**

| மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவு -2017 (ரூ.மில்) | | |
|---|---|---|
| வகை | மதிப்பீட்டு செலவீனம் | உண்மைச் செலவு |
| **மூலதனச் செலவு** | 110.87 | 85.78 |
| **மீண்டெழும் செலவு** | 144.86 | 131.14 |
| **மொத்தம்** | **255.73** | **216.92** |

**வரைபடம் இல. 01: வரவு செலவுத்திட்ட தகவல் – 2017**



## கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல்

கண்காணித்தல் இத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாகக் காணப்படுவதுடன் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான மற்றும் ஒழுங்கான முயற்சியை திட்டமிட்ட முறையில் வேண்டி நிற்கின்றது. 2017ம் ஆண்டில் 1,404 வெளிநாட்டு மற்றும் அரச நிதியுதவியுடனான சிறிய, நடுத்தர மற்றும் பாரிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

**அட்டவணை இல. 03: மொத்த மதிப்பீட்டு செலவுக்கு அமைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் வகைகள் - ரூ.மில்.**

| கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிதி மூலம் | மொத்த செலவு - ரூ.மில். | | | | | மொத்தம் |
| | <50 | 50-500 | 500-3000 | 3000-5000 | >5000 | |
| வெளிநாட்டு | 20 | 39 | 28 | 21 | 113 | 221 |
| உள்நாட்டு | 437 | 480 | 184 | 30 | 52 | 1183 |
| **மொத்தம்** | **457** | **519** | **212** | **51** | **165** | **1404** |

முன்னேற்றங்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான பிரதான ஊடகமான ஒருங்கிணைந்த இணைய அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பு ஒன்று நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற போதும், இத்திணைக்களமானது மீளாய்தல், அறிக்கையிடல், ஒருங்கிணைத் தலுக்கான பிரதான செயற்பாட்டை மேற்கொள்வதுடன் கருத்திட்டங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் காணப்படும் பிரச்சனைகளை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வுகளுக்கான படிமுறைகளை எடுக்கின்றது.



இக்கருத்திட்டங்கள் வழமையாக உரிய தரப்பினருடனான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கள கண்காணிப்பு விஜயங்கள் ஊடாக கண்காணிக்கப்படுகின்றன.

கண்காணித்தல் நடவடிக்கைகளின் போது அமுல்படுத்தலில் சிக்கல்கள் இருப்பதாக இணங்காணப்படும் சில கருத்திட்டங்களுக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்காக அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதனால் இத்திணைக்களமானது சம்பந்தப்பட்ட கருத்திட்டங்கள் உள்ள இடங்களிற்கு கள விஜயங்களை மேற்கொள்கின்றது. அந்த வகையில் 2017 ஆம் ஆண்டில் 22 கள விஜயங்கள் மேற்கொள்ள ப்பட்டுள்ளதுடன் 48 பிரச்சனைகளை கருத்திட்டங்களின் மட்டத்தில் இணங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை இல 04 : கள விஜயங்கள் ஊடாக கண்காணிப்பு முன்னேற்றம் 2017**

| பிரிவு | மேற்கொள் எப்பட்ட களவிஜயங் களின் எண்ணிக்கை | ஏற்புடைய தரப்புகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள் |
|---|---|---|
| கைத்தொழில் நிதி மற்றும் சுற்றாடல் | 04 | 03 |
| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | 03 | 13 |
| மனிதவள அபிவிருத்தி | 05 | 20 |
| பிராந்திய அபிவிருத்தி | 03 | 05 |
| போக்குவரத்து | 07 | 07 |
| **Total** | **22** | **48** |

**விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்**

குறிப்பிடப்பட்ட பிரச்சனைகள், அபிவிருத்தி மாற்றீடுகள், நவீன அணுகு முறைகள், புதிய நிதியளிப்பு ஊடகங்கள் மற்றும் ஒழுங்குமுறை விடயங்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்காக சிறப்புக் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் உரிய தரப்பினருடன் அதாவது கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், அபிவிருத்தி பங்காளர்கள், நிரல் அமைச்சு அலுவலர்கள் மற்றும் திறைசேரி திணைக்கள பிரதி நிதிகளுடன் நடாத்தப்படுகின்றன.

இத்திணைக்களமானது தொடர்ச்சியான வசதிப்படுத்தல், உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் 2017 இல் 52 முன்னேற்ற மீளாய்வு குழுக்கூட்டங்கள் 107 கருத்திட்ட வழிப்படுத்தும் மற்றும் கருத்திட்ட ஒத்துழைப்பு குழுக்கூட்டங்களில் பங்குபற்றுதலூடாக தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், கருத்திட்ட தயார்ப்படுத்தல்களை மேம்படுத்தல், கொள்வனவு, ஆவணப்படுத்தல் முறைமையினை துரிதப்படுத்தல், அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் நிரல் அமைச்சுக்களுக்கு உதவியுள்ளது.

**அட்டவணை இல. 05: 2017 ஆம் ஆண்டில் இடம் பெற்ற விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

| கூட்டங்கள்/கலந்துரையாடல் வகைகள் | இலக்கம் |
|---|---|
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 52 |
| துறைசார் கூட்டங்கள் | 04 |
| நிதி வழங்கும் நிறுவனங்களுடன் செய்யப்பட்ட கூட்டங்கள் | 35 |
| செயற்பாட்டு குழு கூட்டங்கள்/ கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் | 107 |
| வேறு விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் | 81 |
| அரச உடமைக் கம்பனிகள் கூட்டம் | 06 |
| நிதி வழங்கும் நிறுவனங்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் | 05 |
| **மொத்தம்** | **290** |

மேலும் நிதி வழங்குனர்களான ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் திறைசேரி அலுவலர்களுடனான மீளாய்வில் 88 கருத்திட்டங்களின் நிதி மீளளிப்பு 2017 ம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ள தீர்க்கப்படாத பிரச்சனைகள் தீர்மானங்களை



எடுப்போரின் கவனத்திற்கு கொண்டுவருவதன் மூலம் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கின்றது.

**தேசிய மதிப்பீட்டு கொள்கையை உருவாக்குதல்**

மேலும், திணைக்களத்தின் பெருமுயற்சியால் தேசிய மதிப்பீட்டு கொள்கை வரைபானது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதன் இறுதி வரைபுக்காக கௌரவ அமைச்சரிடமிருந்து அனுமதியும் கிடைத்துள்ளது. இதற்கான கலந்துரையாடல் கூட்டங்களும் உரிய நிறுவனங்களுடன் நடாத்தப்பட்டன. இதற்கமைய, உரிய முகவர்களான நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், மாவட்ட/ பிரதேச திட்டமிடல் அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நன்கொடை வழங்குனர்களுடன் 5 ஆலோசனை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. இது கருத்திட்ட மதிப்பீட்டு கலாச்சாரத்தை பொது துறையில் நிறுவனமயப்படுத்துவதற்கும் அதேபோன்று பெறுமதி மிக்க உள்ளீடுகளை கொண்டு கொள்கை ஒருங்கிணைப்பை முடிவுறுத்தலுக்கு பங்களிப்பை வழங்குகின்றது. இதன் விளைவாக நாட்டின் அபிவிருத்தி திட்டமிடல்களை வலுப்படுத்துவதற்காக மதிப்பீட்டு சான்றுகளை பயன்படுத்துவதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

**கருத்திட்ட கணிப்பீடுகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ளல்**

கருத்திட்டங்களின் அபிவிருத்தி பற்றி மதிப்பீடு மற்றும் கணிப்பீடு செய்வதில் உள்ள குறைபாடுகளை கருத்தில் கொண்டு 2016 ஆம் ஆண்டில் ஒரு கருத்திட்டம் மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டது. (சிலாபத்தில் நாரிகொடல்ல எனும் இடத்தில் அமைந்துள்ள வீடமைப்புத்திட்டம் மதிப்பீட்டுக்காக 2016 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டது மற்றும் யூன் மாதம் மேற்கொண்டது). இதற்கமைய இறுதி மதிப்பீட்டறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.



**கொள்கை வழிகாட்டல்களின் அமுலாக்கல் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல்**

அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக இச்செயற்பாடானது 2015 ம் ஆண்டிலிருந்து இத்திணைக்களத்திற்கு பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நேரடியாக சமூகத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டவை. ஆகையால் இவற்றின் விரைவான பெறுபேற்றை உரிய நேரத்தில பெற்றுக்கொள்ளுதல் இன்றியமையாதாகும். இதற்கமைய, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு, அமைச்சர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் அடங்கிய உயர் மட்ட குழக்களான பொருளாதார முகாமைத்துவ அலுவலக குழு (OCEM) மற்றும் பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை (CCEM) குழு, செயல் விளக்க கூடம் ஆகியவற்றின் கவனத்திற்கு கருத்திட்ட அமுல்படுத்தலிலுள்ள தாமதங்களை கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### அ) செயல் விளக்கக் கூடம்

இதற்கமைய, அரசின் மூலோபாய முயற்சிகளுக்கு ஏற்ப நாட்டில் முதலீடுகளை அதிகரிக்க, தனியார்துறை முதலீட்டு முன்மொழிவுகளின் அனுமதி செயன்முறையை துரித கதியில் நடைபெறச் செய்வதற்கு திணைக்களம் ஒரு இடையீட்டாளராகவும், வசதியளிப்பவருமாக செயற்படுகிறது. பல்வேறு காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 02 முதலீட்டு முன்மொழிவுகள் உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு கள விஜய அவதானிப்புகள், விசேட கற்கைகள் மற்றும் தன்னிச்சையான அறிக்கைகள் என்பனவற்றின் ஊடாக தீர்வு காணப்பட்டுள்ளது.

கருத்திட்டங்களில் காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக பிரதம மந்திரியின் அலுவலகத்திலுள்ள தேசிய செயல் விளக்கக் கூடத்திலும் மற்றும் கருத்திட்டங்களின் சுமுகமான செயற்பாட்டிற்கு இடையூராக இணங்காணப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்காக பாரளுமன்றத்திலும் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சுற்றுலா, நீர்ப்பாசனம், நீர், மின்வள, சக்தி மற்றும் போக்குவரத்து துறைகளில் காணப்பட்ட இருபத்து நான்கு (24) பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டு அவற்றின் இலக்கை அடைந்து கொள்வதன் பொருட்டு விரைவான அமுல்படுத்தல்களை மேற்கொள்வதற்காக தீர்வுகளும் வழங்கப்பட்டன.

### ஆ) OCEM மற்றும் CCEM கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அமுல்படுத்தல்களை கண்காணித்தல்

இத்திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டிற்கு மேலதிகமாக பொருளாதார முகாமைத்துவ உத்தியோகபூர்வ குழு (OCEM) மற்றும் பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் (CCEM) கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அமுல்படுத்தல்களை கண்காணிப்பதற்கான பொறுப்பு இத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய திணைக்களமானது அத்தீர்மானத்தின் பின்பற்றுதல்கள், முன்னேற்றங்களை கண்காணித்து அவை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொளவதற்காக மாதாந்த அறிக்கைகளை கௌரவ பிரதம மந்திரி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. OCEM மற்றும் CCEM இன் ஐந்து மாதாந்த அறிக்கைகளும் எதிர்பாாக்கப்பட்டதை போன்று அமுலாக்கப்பட்டிராத தீர்மானங்கள் தொடர்பான பின்பற்றல் நடவடிக்கைகள் உள்ளடக்கிய ஒரு மதிப்பாய்வு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 06: OCEM மற்றும் CCEM தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள்**

| விபரம் | CCEM | OCEM |
|---|---|---|
| 2017 யூன் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான மாதாந்த அறிக்கைகள் | 05 | 05 |
| சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கைகள் | 01 | 01 |
| **Total** | **06** | **06** |

### பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அரச உடைமை கம்பனிகளை வசதிப்படுத்தல்

அரசின் ஒரு கொள்கையாக அரச உடைமை கம்பனிகளின் பெறுபேறுகளின் அடைவுகளை அறிக்கையிடும் பணியானது கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச உடமைக் கம்பனிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோள்கலுக்கமைய பெறுபேறுகளை திருப்திகரமாக அடைந்து கொள்வதற்காக அக்கம்பனிகளை வலுப்படுத்தும் முகமாக DPMM இனால் பெறுபேற்று குறிகாட்டிகள் (KPI) உள்ளடங்களாக நிறுவன பெறுபேற்று சட்டகம் (Organizational Result Frame -ORF) என்ற எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அரச உடமைக்கம்பனிகளின் செயற்பாட்டை அளவிடுவதற்கான பௌதிக இலக்குகள் மற்றும் காலவரையறை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் ஜனாதிபதி செயலகத்திற்கு வருடாந்தம் அறிக்கையிடப்படுகின்றது.

**அட்டவணை இல 07: நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்தல் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பித்தலுக்கான முன்னேற்றம்**

| அரச உடமை கம்பனிகளின் வகைகள் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு |
|---|---|---|---|---|
| நிறைவுசெய்யப்பட்ட (ORF) மொத்தம் | 219 | 235 | 236 | 240 |
| சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்றங்கள் | 140 | 158 | 139 | 155 |
| நிலுவையிலுள்ள முன்னேற்றம் | 62 | 60 | 81 | 85 |
| நிறைவு செய்யும் செயற்பாட்டிலுள் ளவைகள் | 41 | 25 | 24 | 20 |

DPMM இன் தொடர்ச்சியான தொழிநுட்ப ஒத்துழைப்புடன் (தொடர்ச்சியான பயிற்சி அமர்வுகள், ஆலோசனை பட்டறைகள், தனிப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஒன் லைன் உதவிகள்) 2017ம் ஆண்டின் 4வது காலாண்டு இறுதி வரையில் 303 அரச உடமைக் கம்பனிகளில் 240 கம்பனிகள் தமது நிறுவன பெறுபேற்று சட்டகத்தை (ORF) தயாரிக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்துள்ளன, அதேவேளை இது 3வது காலாண்டு இறுதியில் 236 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது மற்றும் 20 நிறுவனங்கள் தொடர்ந்தும் ORF தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்த முயற்சியினால் 2017 ம் ஆண்டு 4வது காலாண்டு இறுதியில் 155 அரச உடமை நிறுவனங்களுக்கு அவற்றின் பெறுபேற்று அடைவுகளின் அறிக்கையை வழங்ககூடியதாக இருந்தது.




அதற்கமைய, 2017ம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவை உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ் அறிக்கைகள் அரச உடமை நிறுவனங்கள் வினைதிறன் வாய்ந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவது

தொடர்பான எதிர்கால தீர்மானமெடுத்தலுக்கும் அந்நிறுவனங்களை அவர்களது பங்குதாரர்களுக்கு பொறுப்புகூறும் வகையில் ஆக்குவதற்கும் உதவுகின்றது. (இணைப்பு *III*)

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் (DCB), கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி (RIDP) மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களின் (SP) அமுல்படுத்தல்களை கண்காணித்தல்**

கிராமிய, பிராந்திய வேற்றுமைகளை குறைத்தல், கிராமிய மற்றும் பிராந்திய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கிராம பிரதேசங்களில் வறுமை ஒழிப்பு, நிலையான பொருளாதார, கலாசார, சமூக மற்றும் சமய அபிவிருத்திகளுக்கான தீர்வாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் (DCB), கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி (RIDP) மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு வருடாந்தம் வழங்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள முக்கியத்துவத்தை கவனத்திற்கொண்டு DPMM இற்கு இந்நிகழ்சித்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை உரிய அதிகாரிகளுக்கு வழங்குவதற்கான கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வினைதிறனான தகவல்கள் சேகரிப்பு மற்றும் விரைவான அமுல்ப்படுத்தல்களுக்காக சுமுகமான கண்காணித்தல் நடவடிகைகளை மேற்கொள்வதறகாக புதிய இயக்குதல் மற்றும் கண்காணித்தல் பிரிவுகள் (O&M Cells) அனைத்து மாவட்டங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது 2017 ம் ஆண்டின் யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் வாராந்த அறிக்கைகள் 25 மாவட்டங்களினதும் O&M Cells மூலம் DPMM இற்கு வழங்கப்படுகின்றது அத்துடன் செயற்றிறன் வாய்ந்த அமுலாக்கல்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியின் பூரண பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும் தகவலறியப்பட்ட தீர்மானங்களை எடுப்பதற்காகவும் இவ்வறிக்கைகள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சிற்கு வழங்கப்படுகின்து மேலும் இவ் இணங்காணப்பட்ட கருத்திட்டங்கள் குறித்த நிதியாண்டு காலப்பகுதியிலேயே நிறைவு செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

இதற்கமைய, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு முன்னேற்ற அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சனைகளை கண்காணிப்பதன் மூலம் கருத்திட்டங்களின் சுமுகமான அலுல்படுத்தல்களை முகாமை செய்வதற்கு பொருத்தமான தீர்மானங்களை எடுக்கின்ற அதேவேளை மாவட்டங்களுக்கான வினைத்திறனான காசுப்பாய்ச்சலை

உத்தரவாதப்படுத்த கூடியதாக இருக்கின்றது.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட 29,328 கருத்திட்டங்களில் சிறிய நீர்ப்பாசனம், சமூக அடிப்படையிலான நீர் வழங்கல், சிறியளவிலான மின்மயமாக்கல், கிராமப்புற பாதைகள் மற்றும் ஏனைய கிராமிய உட்கட்டமைப்பு ஆகிய துறைகளின் கீழ் 29,309 கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான மொத்த செலவு ரூ.5,713 மில்லியனாகும். (இணைப்பு *IV*)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட 18,060 கருத்திட்டங்களில் சிறிய நீர்ப்பாசனம், கிராமிய நீர் வழங்கல், கிராமப்புற மின்சாரமயமாக்கல், கிராமப்புற பாதைகள், சமூக அபிவிருத்தி, சமூக – பொது நலன், சமூக சேவைகள், சமூக பாதுகாப்பு, கிராமிய பொருளாதார மற்றும் ஏனைய கிராமிய உட்கட்டமைப்பு ஆகிய துறைகளின் கீழ் 18,047 கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான மொத்த செலவு ரூ.1,900 மில்லியனாகும். (இணைப்பு *V*)



13 மாவட்டங்களில் 1,660 கருத்திட்டங்கள் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி விஷேட நிகழ்ச்சித்திட்டம் பகுதி – 1 இன் கீழ் செயற்ப்படுத்தப்படுகின்றது அத்துடன் 19 மாவட்டங்களில் 2,295 கருத்திட்டங்கள் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி விஷேட நிகழ்ச்சித்திட்டம் பகுதி – 2 இன் கீழ் செயற்ப்படுத்தப்படுகின்றது.

இதற்கமைய், மேற்கூறப்பட்ட நான்கு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2017 ம் ஆண்டில் நாடு முழுவதும் அமுல்படுத்துவதற்கு 51,343 கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 14, 988 மில்லியனாகும்.

**அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்றிறன் அறிக்கைகளை வெளியிடல்**

கொள்கை வகுப்பாளர்கள், நன்கொடை முகவர்கள் என்போருக்கு மத்தியில் கருத்திட்டங்கள் மற்றும் வருடாந்த செயற்றிட்டங்களின் முன்னேற்றங்களை அறியத்தருவதுடன் இறுதியாக திணைக்களத்தின் இணையத்தளமான www.pmm.gov.lk இல் வெளியிடப்படுவதனூடாக பொது மக்கள், சிவில் சமூகம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு பொது செலவினங்கள் மற்றும் வளங்களின் வினைதிறன் மற்றும் வினைதிறன் வாய்ந்த பயன்பாடு குறித்து அறியக்கூடிய வழியை ஏற்படுத்துகின்றது.

2017ம் ஆண்டினுள் வெளியிடப்பட்ட அறிக்கைகள் பின்வருமாறு:

- “பாரியளவிலான கருத்திட்டங்களின் செயற்றிறன்” – (2017 இரண்டாம் காலாண்டு)
- “குறைவான நிதி செயற்றிறன் முன்னேற்றங்களை ஈட்டிய அமைச்சுக்கள் பற்றிய சுருக்க அறிக்கை” – (2017 இரண்டாம் காலாண்டு)
- “செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்” (2017 - மூன்றாம் காலாண்டு)
- அரச உடமை கம்பனிகளின் பெறுபேற்று அடைவுகள் (2017 3ம் காலாண்டு)
- நிறுவன நடைமுறைக் கைநூல் – இரண்டாவது பதிப்பு
- 50 முதன்மைக் கருத்திட்டங்கள்
- பாரியளவிலான கருத்திட்டங்களின் செயற்றிறன் (5,000 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான)

**அலுவலர்களுக்கான பயிற்சியளிப்பு மற்றும் திறன் விருத்தி**

திணைக்களத்தின் செயற்பாடுகளை சுமுகமாக மேற்கொள்வதற்கு வினைதிறன், விளைதிறன் வாய்ந்த அலுவலர் குழாம் ஒன்றை பேணவேண்டியதனால் அவர்களின் திறன்களை கட்யெழுப்புதல் முக்கியமானதாகும், இதற்கமைய குழுக்கள் அடிப்படையிலான திறன் விருத்திக்காக உள்நாட்டு பயிற்சிப்பட்டறைகள் இத் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் நடாத்தப்பட்டது. கருத்திட்ட திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பிடல் என்பவற்றை மையப்படுத்திய வெளிநாட்டு அனுபவங்களை உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும், இப்பயிற்சிகள் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், திறன்கள் மற்றும் அறிவை ஏனைய அலுவலர்களுடன் பகிர்ந்து அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றின் மூலம் அவர்களின் வெளிப்படுத்தும் திறனை விருத்தி செய்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டது.

2017 ம் ஆண்டில் அலுவலர்கள் பங்குபற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பபட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 07 : உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி – 2017**

| பயிற்சி நிகழச்சித்திட்டம் | உள்நாடு / வெளிநாடு | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குறுங் காலப் பயிற்சிகள் | வெளிநாடு | 37 |
| நீண்ட காலப் பயிற்சிகள் | வெளிநாடு | - |
| நீண்ட காலப் பயிற்சிகள் | உள்நாடு | 02 |
| குறுங் காலப் பயிற்சிகள் | உள்நாடு | 09 |
| Total | | **48** |

# கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் - நிறுவன கட்டமைப்பு 31. 12. 2017

*இணைப்பு I*




இநிசே - இலங்கை நிர்வாக சேவை, இதிசே - இலங்கை திட்டமிடல் சேவை

அஅ – அபிவிருத்தி அலுவலர், அஉ – அபிவிருத்தி உதவியாளர்

அசேசே – அலுவலக சேவகர் சேவை, பொமுஉ – பொது முகாமைத்துவ உதவியாளர்

*Annex - II*

ශීර්ෂ අංකය
**தலைப்பு இல.**
**Head No** — **280**

දෙපාර්තමේන්තුව
**திணைக்களம்**
**Department** — වියාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Department of Project Management & Monitoring**

## වියදම් සාරාංශය
## செலவுச் சுருக்கம்
## Summary of Expenditure

| වැඩසටහන<br>நிகழ்ச்சித் திட்டம்<br>Programme | විස්තරය<br>விவரணம்<br>Discription | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2017<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2017<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| 2 | පුනරාවර්තන වියදම<br>மீண்டுவரும் செலவு<br>Recurrent Expenditure | 87,843,151 | 97,577,000 | 144,866,000 | 131,137,251 | 13,728,749 |
| | මූලධන වියදම<br>மூலதனச் செலவு<br>Capital Expenditure | 12,846,725 | 14,463,000 | 110,874,000 | 85,787,436 | 25,086,564 |
| | **එකතුව/மொத்தம்<br>Total** | **100,689,876** | **112,040,000** | **255,740,000** | **216,924,687** | **38,815,313** |

ශීර්ෂ අංකය/**தலைப்பு இல**/**Head No :280**

අමාත්‍යාංශය / දෙපාර්තමේන්තුව - ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம் /Programme No:02**

ව්‍යාපෘතිය **01-** ව්‍යාපෘති කළමනාකරණය සහ අධීක්ෂණය

**கருத்திட்டம் :** 01 **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு**

**Project :01 - Project Management & Monitoring**

පුනරාවර්තන වියදම්/ **மீண்டுவரும் செலவு /Recurrent Expenditure**

| විස්තරය<br>விவரணம்<br>Discription | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2017<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2017<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|
| පෞද්ගලික පඩි නඩි<br>ஆளுக்குரிய வேதானாதிகள்<br>Personal Emoluments | 48,054,750 | 57,350,000 | 57,350,000 | 46,136,950 | 11,213,050 |
| වෙනත්<br>ஏனையவை<br>Other | 39,788,401 | 40,227,000 | 87,516,000 | 85,000,301 | 2,515,699 |
| එකතුව/ மொத்தம்<br>**Total** | **87,843,151** | **97,577,000** | **144,866,000** | **131,137,251** | **13,728,749** |

ශීර්ෂ අංකය/ **தலைப்பு இல** /Head No :280

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம்** /**Programme No:02**

මූලධන වියදම්/ **மூலதனச் செலவு** / **Capital Expenditure**

| මූලධන වියදම / மூலதனச் செலவு<br>Capital Expenditure | | 2016<br>සත්‍ය<br>වියදම<br>உள்ளபடி<br>செலவு<br>Actual<br>Expenditure<br>Rs. | 2017<br>අනුමත<br>ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட<br>மதிப்பீடு<br>Approved<br>Estimate<br>Rs. | 2017<br>සංශෝධිත<br>ඇස්තමේන්තුව<br>மீளாய்வு<br>செய்யப்பட்ட<br>மதிப்பீடு<br>Revised<br>Estimate<br>Rs. | 2017<br>සත්‍ය<br>වියදම<br>உள்ளபடி<br>செலவு<br>Actual<br>Expenditure<br>Rs. | 2017<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| වැය විෂය අංකය<br>விடய குறியீடு<br>Object Code | විස්තරය<br>விவரணம்<br>Discription | | | | | |
| | <u>මූලධන වත්කම් පුනරුත්ථාපනය සහ වැඩි දියුණු කිරීම</u><br>**<u>மூலதன இருப்புச் சொத்துக்களின் முன்னேற்றம்</u>**<br>**<u>Rehabilitation & Improvement of Capital Assets</u>** | | | | | |
| 2001 | ගොඩනැගිලි හා ඉදිකිරීම්<br>கட்டிடங்களும் அமைப்புக்களும்<br>Bulding & Structure | | - | 20,000,000 | - | 20,000,000 |
| 2002 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ<br>இயந்திரவகையும் உபகரணமும்<br>Plant Machinary & Equipment | 32,589 | - | - | - | - |
| 2003 | වාහන<br>வாகனங்கள்<br>Vehicles | 127,300 | - | - | - | - |
| | <u>මූලධන වත්කම් අත්පත් කර ගැනීම</u><br>**<u>மூலதன இருப்புச் சொத்துக்கள் கைப்பற்றல்</u>**<br>**<u>Acquisition of Capital Assets</u>** | | | | | |
| 2101 | වාහන<br>வாகனங்கள்<br>Vehicles | - | - | 59,800,000 | 59,800,000 | - |
| 2102 | ගෘහ භාණ්ඩ හා කාර්යාලීයය උපකරණ<br>தளபாட காரியாலய உபகரணமும்<br>Furniture & Office Euipment | 868,190 | 1,900,000 | 1,900,000 | - | 1,900,000 |
| 2103 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ | 14,500 | - | - | - | - |
| | හැකියා වර්ධනය | | | | | |
| 2401 | කාර්ය මණ්ඩල පුහුණු කිරීම්<br>பயிற்சியும் ஆளுமை விருத்தியும்<br>Training & Capacity Building | 1,192,130 | 2,000,000 | 2,111,000 | 2,110,747 | 253 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | <u>ප්‍රාග්ධන මාරුකිරීම්</u><br><br><u>Capital Transfers</u> | | | | | |
| 2202 | සංවර්ධන සහාය කාර්යයන්<br><br>Development Assistance | | | 11,500,000 | 11,500,000 | |
| 2509 | වෙනත්<br><br>Other | | | 5,000,000 | 1,968,730 | 3,031,270 |
| | උප එකතුව | 2,234,709 | 3,900,000 | 100,311,000 | 75,379,477 | 24,931,523 |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல /Head No :280

වැඩ සටහන් අංකය/ நிகழ்ச்சித் திட்டம் /Programme No: 02

මූලධන වියදම්/ மூலதனச் செலவு / Capital Expenditure

| වැය විෂය අංකය<br>விடய குறியீடு<br>Object Code | මූලධන වියදම மூலதனச் செலவு<br>Capital Expenditure<br><br>විස්තරය<br>விவரணம்<br>Discription | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2017<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2017<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2017<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| | <u>ව්‍යාපෘති ඇගැයීම හා වෙබ් අඩවි පාදක කරගත් අධීක්ෂණ පද්ධතිය</u> | | | | | |
| 2506(11) | ආයෝජන<br>ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුවේ හැකියා ශක්තිමත් කිරීම<br>**திட்ட அமுலாக்கலின் ஆற்றலை வலுவடையசெய்தல்**<br>**Strengthening the plan Implementation Capacity** | 2,876,967 | 3,692,000 | 3,692,000 | 3,640,739 | 51,261 |
| 2506(13) | ආයෝජන<br>නැගී එන පළාත් ඉලක්ක කරගනිමින් මූලික සමාජ සේවාවන් වැඩිදියුණු කිරීමේ ව්‍යාපෘතිය | - | - | - | - | - |
| 2506(17) | ආයෝජන | 7,735,049 | 6,871,000 | 6,871,000 | 6,767,220 | 103,780 |
| | එකතුව / **மொத்தம்**<br>**Total** | **12,846,725** | **14,463,000** | **110,874,000** | **85,787,436** | **25,086,564** |

**මූල්‍ය ප්‍රභවයන්**
**நிதி மூலங்கள்**
**Financial Sources**

| වැඩ සටහන நிகழ்ச்சித் திட்டம் **Programme** | විස්තරය விவரணம் **Discription** | | | **2016** සත්‍ය වියදම உள்ளபடி செலவு **Actual Expenditure Rs.** | **2017** අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு **Approved Estimate Rs.** | **2017** සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு **Revised Estimate Rs.** | **2017** සත්‍ය වියදම உள்ளபடி செலவு **Actual Expenditure Rs.** | **2017** ඉතිරිය சேமிப்புக்கள் **Savings Rs.** |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | ඒකාබද්ධ අරමුදල | திட்ட நிதியம் | Consolidated Fund | 92,954,828 | 105,169,000 | 248,869,000 | 210,157,467 | 38,711,533 |
| | විශේෂ නීති සේවා | வசேட சட்டம் | Special Law | - | - | - | - | - |
| | *විදේශාධාර* | *வெளிநாட்டு உதவி* | ***Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | | | | | |
| | ප්‍රධාන | கொடைகள் | Grants | - | - | - | - | - |
| | *ප්‍රතිපූර්ණය කළ හැකි විදේශාධාර* | *மீள்ளிக்கப்படக்கூடிய வெளிநாட்டு உதவி* | ***Reimbursable Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | - | - | - | - | - |
| | ආධාර | கொடைகள் | Grants | - | - | - | - | - |
| | විදේශාධාර සම්බන්ධිත දේශීය අරමුදල් අරමුදල් | நிதியம் | Funds | 7,735,048 | 6,871,000 | 6,871,000 | 6,767,220 | 103,780 |
| | විදේශාධාර | *வெளிநாட்டு உதவி* | Foreign Aid | - | - | - | - | - |
| | **මුළු වියදම** | **மொத்த செலவுகள்** | **Total Expenditure** | **100,689,876** | **112,040,000** | **255,740,000** | **216,924,687** | **38,815,313** |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல / Head No :280

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Ministry/Department : Department of Project Management & Monitoring**

රජයේ නිලධාරීන්ගේ අත්තිකාරම් බී ගිණුම : විෂය අංකය **28001**
**அரச ஊழியர்களுக்கான முற்பண ஆ(B) கணக்கு : விடய இல : 28001**
**Public Officers Advance Accounts :Subject No 28001**

| වර්ෂය ஆண்டு Year / විස්තරය **விவரணம்** Discription | 2016 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2017 අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு Approved Estimate Rs. | 2017 සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Revised Estimate Rs. | 2017 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2017 සීමා ඉක්මවීම எல்லை மீறிய வரையறை Limits Exceeds Rs. |
|---|---|---|---|---|---|
| ආරම්භක ශේෂය ஆரம்ப மீதி Openning Balance | 13,067,746.06 | | | 11,925,368.96 | |
| වර්ෂයේ හර ஆண்டு கால வரவு Debit in during the year | 4,930,267.00 | 5,000,000.00 | 6,000,000.00 | 6,725,386.29 | |
| එකතුව/ மொத்தம் /Total | 17,998,013.06 | 5,000,000.00 | 6,000,000.00 | 6,725,386.29 | |
| අඩු කළා/ கழி /Less | | | | | |
| වර්ෂයේ මුළු බැර ஆண்டு கால செலவு Credit in during the year | 6,072,644.10 | 4,000,000.00 | 3,200,000.00 | 5,040,599.51 | |
| වර්ෂය අවසානයේ හර ஆண்டு முடிவில் மீதி வரவு End of the year Debit Balance | 11,925,368.96 | 20,000,000.00 | 20,000,000.00 | 13,610,155.74 | |

| <u>සටහන/ குறிப்பு /Note</u> | **හර/ வரவு/Debit** | **බැර/ செலவு/Credit** |
|---|---|---|
| වර්ෂයේ සීමාවට බලපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280011) | 5,217,278.19 | 3,310,517.76 |
| වර්ෂයේ සීමාවට බල නොපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280012) | 1,508,108.10 | 1,730,081.75 |
| එකතුව | 6,725,386.29 | 5,040,599.51 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுளை ஏற்படுத்தும் வரவு செலவுகள் ( விடய இல. 280011 ) | 5,217,278.19 | 3,310,517.76 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுகள் ஏற்படுத்தாத வரவு செலவுகள் ( விடய இல. 280012 ) | | |
| மொத்தம் | 1,508,108.10 | 1,730,081.75 |
| மொத்தம் | 6,725,386.29 | 5,040,599.51 |
| Debit & Credit which affect on Annual limit (Subjects No 280011) | | |
| Debit & Credit which does not affect on Annual limit (Subjects No 280012) | 5,217,278.19 | 3,310,517.76 |
| Total | 1,508,108.10 | 1,730,081.75 |
| | 6,725,386.29 | 5,040,599.51 |

## நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்தல் மற்றும் முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் செயற்பாடு

| | 2ம் காலாண்டு | 3ம் காலாண்டு | 4ம் காலாண்டு |
|---|---|---|---|
| நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்து முடித்துள்ள அரச உடமைக்கம்பனிகள் | 235 | 236 | 240 |
| முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்த அரச உடமைக் கம்பனிகள் | 158 | 139 | 155 |
| முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரச உடமைக் கம்பனிகள் | 60 | 81 | 85 |
| | | | |
| ஆரச உடமைக் கம்பனிகள் தற்போதும் நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்து முடிப்பதற்கான நிலையிலுள்ளவை | **25** | **24** | **20** |

இணைப்பு IV

# கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (RIDP) - 2017

## மாவட்ட ரீதியாக நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் 2017/12/31

| இல. | மாவட்டம் | தகுதியுள்ள கிராம சேவகர் பிரிவுகளின் இலக்கம் | கருத்திட்டங்கள் - அனுமதி வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | வகைப்படுத்தப்பட்ட துறைகளின் எண்ணிக்கை* | | | | | | ஒதுக்கீடு (ரூபா.மில்) | செலவினம் (ரூபா.மில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டுமாணம் | பொருட்கள் / சேவைகள்/கொள்வனவு | மொத்தம் | SF | RE | MI | WS | OI | LCD | | | |
| 1 | அம்பாறை | 503 | 487 | 213 | 700 | 3 | 57 | 38 | 19 | 361 | 222 | 251.50 | 230.06 | 312,557 |
| 2 | அநுராதபுரம் | 694 | 828 | 36 | 864 | 8 | 3 | 159 | 80 | 578 | 36 | 347.00 | 329.87 | 304,418 |
| 3 | பதுளை | 567 | 634 | 197 | 831 | 1 | 19 | 168 | 109 | 337 | 197 | 283.50 | 245.94 | 77,543 |
| 4 | மட்டக்களப்பு | 345 | 373 | 2 | 375 | | | 1 | | 371 | 3 | 172.50 | 170.00 | 319,457 |
| 5 | கொழும்பு | 557 | 702 | 16 | 718 | 1 | 40 | 37 | 17 | 608 | 15 | 265.62 | 233.46 | 505,953 |
| 6 | காலி | 896 | 1,119 | 4,027 | 5,146 | - | - | 28 | 21 | 1,070 | 4,027 | 446.55 | 277.22 | 139,980 |
| 7 | கம்பஹா | 1,177 | 1,720 | 349 | 2,069 | - | 3 | 77 | 53 | 1,591 | 345 | 588.50 | 435.40 | 603,466 |
| 8 | ஹம்பாந்தோட்டை | 576 | 724 | 4 | 728 | - | - | 83 | 21 | 619 | 5 | 288.00 | 150.40 | 277,118 |
| 9 | யாழ்ப்பாணம் | 435 | 478 | 38 | 516 | 2 | 143 | 140 | 44 | 170 | 17 | 217.50 | 215.88 | 204,062 |
| 10 | களுத்துறை | 762 | 1,133 | 183 | 1,316 | - | 830 | 36 | 69 | 200 | 181 | 380.99 | 159.40 | 251,030 |
| 11 | கண்டி | 1,187 | 1,819 | 3,304 | 5,123 | - | 527 | 70 | 42 | 1,663 | 2,821 | 593.16 | 579.57 | 825,826 |
| 12 | கேகாலை | 573 | 1,045 | 28 | 1,073 | | | 35 | 77 | 933 | 28 | 285.50 | 244.48 | 78,585 |
| 13 | கிளிநொச்சி | 95 | 104 | 1 | 105 | | 4 | 11 | 3 | 82 | 5 | 47.50 | 47.16 | 36,061 |
| 14 | குருணாகலை | 1,610 | 1,995 | 160 | 2,155 | 4 | - | 303 | 119 | 1,562 | 167 | 805.00 | 612.35 | 673,035 |
| 15 | மன்னார் | 153 | 189 | 4 | 193 | | | 6 | 15 | 167 | 5 | 76.50 | 76.20 | 99,860 |
| 16 | மாத்தளை | 539 | 667 | 376 | 1,043 | | 302 | 42 | 52 | 271 | 376 | 272.50 | 268.82 | 131,650 |
| 17 | மாத்தறை | 650 | 765 | 48 | 813 | - | 623 | 32 | 41 | 85 | 32 | 325.00 | 239.16 | 161,606 |
| 18 | மொனராகலை | 319 | 354 | 999 | 1,353 | | 254 | 5 | 37 | 55 | 1,002 | 157.90 | 152.19 | 82,160 |
| 19 | முல்லைத்தீவு | 136 | 155 | 1 | 156 | 22 | - | 9 | 7 | 117 | 1 | 68.00 | 67.47 | 41,641 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | நுவரெலியா | 491 | 531 | 1 | 532 | - | 3 | 6 | 20 | 502 | 1 | 245.50 | 241.79 | 168,502 |
| 21 | பொலன்நறுவை | 295 | 379 | 3 | 382 | 1 | 2 | 7 | 19 | 346 | 7 | 147.50 | 118.71 | 307,689 |
| 22 | புத்தளம் | 548 | 607 | 1,208 | 1,815 | 6 | 225 | 88 | 106 | 194 | 1,196 | 274.00 | 266.69 | 194,370 |
| 23 | இரத்தினபுரி | 575 | 805 | 79 | 884 | | 1 | 26 | 99 | 683 | 75 | 287.50 | 197.82 | 170,151 |
| 24 | திருகோணமலை | 230 | 277 | 7 | 284 | | 277 | | | 7 | | 115.00 | 103.46 | 107,012 |
| 25 | வவுனியா | 102 | 113 | 41 | 154 | - | 57 | 36 | 3 | 18 | 40 | 51.00 | 49.82 | 51,984 |
| **Total** | | **14,015** | **18,003** | **11,325** | **29,328** | **48** | **3,370** | **1,443** | **1,073** | **12,590** | **10,804** | **6,993.2** | **5,713.3** | **6,125,716** |

***** **கருத்திட்டங்கள் பின்வரும் துறைகள் ரீதியாக வகைப்படுத்தப்பட வேண்டும்**

**SF-** களஞ்ச்சியசாலை வசதி

**RE-** கிராமிய பொருளாதாரம்

**MI -** சிறிய நீர்ப்பாசனம் ( சிறிய நீர்ப்பாசன கருததிட்டங்களுக்கான விவசாய நடவடிக்கைகள் :- கால்வாய்கள், கட்டுமாணம் மற்றும் திருத்தங்கள், அணைக்கட்டுக்கள், குளங்கள் மற்றும் கட்டுக்கிணறுகள்

**WS -** சமூக அடிப்படையிலான நீர் விநியோகம் (குடி நீர் மற்றும் பொது குளியல் வசதிகளை மேம்படுத்துவதற்கு புனர் நிர்மாணம் மற்றும் புதிய கட்டுமாணம் , சமூக அடிப்படையிலான நீர் விநியோக கருத்திட்டங்கள)

**OI -** கிராமிய வாழ்வாதார அபிவிருத்தியை வழி நடத்தும் வேறு உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள்

(கிராம மட்டத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய வாழ்வாதார வேறு பௌதீக உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள்)

**LCD** - வாழ்வாதார மற்றும் திறன் அபிவிருத்தி

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2017

## மாவட்ட ரீதியாக நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் 2017/12/31

| இல. | மாவட்டம் | கருத்திட்டங்கள் | | | | | | | | | | | | | | | ஒதுக்கீடு (ரூபா.மில்) | செலவினம் (ரூபா.மில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதி வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | வகைப்படுத்தப்பட்ட துறைகளின் எண்ணிக்கை* | | | | | | | | | | | | | | |
| | | கட்டுமானம் | பொருட்கள் / சேவைகள்/கொள்வனவு | மொத்தம் | WS | EL | RA | EI | RW | CD | MI | SW | SS | CP | LD | RE | | | |
| 1 | அம்பாறை | 298 | 400 | 698 | 16 | 14 | 46 | 14 | 56 | 52 | 16 | 297 | 114 | 2 | 9 | 62 | 84.00 | 79.12 | 408,800 |
| 2 | அநுராதபுரம் | 353 | 818 | 1,165 | 8 | 13 | 174 | 1 | 23 | 51 | 25 | 734 | 124 | - | 6 | 6 | 92.04 | 87.86 | 308,543 |
| 3 | பதுளை | 340 | 294 | 634 | 26 | - | 209 | - | 32 | 11 | 17 | 176 | 159 | - | 4 | - | 94.34 | 81.88 | 147,767 |
| 4 | மட்டக்களப்பு | 198 | 271 | 469 | - | - | 17 | - | 65 | 21 | - | 284 | 81 | - | 1 | - | 59.99 | 59.26 | 294,632 |
| 5 | கொழும்பு | 583 | 630 | 1,213 | 8 | 16 | 232 | - | 83 | 101 | 6 | 499 | 212 | 0 | 52 | 4 | 231.69 | 210.14 | 574,360 |
| 6 | காலி | 391 | 537 | 928 | 5 | 7 | 211 | - | 30 | 65 | 7 | 439 | 157 | - | 2 | 5 | 103.20 | 57.36 | 256,738 |
| 7 | கம்பஹா | 535 | 236 | 771 | 7 | 5 | 282 | | 51 | 79 | 24 | 204 | 82 | - | 20 | 17 | 200.61 | 164.20 | 376,191 |
| 8 | ஹம்பாந்தோட்டை | 265 | 346 | 611 | 7 | 1 | 78 | 0 | 56 | 34 | 23 | 307 | 98 | 0 | 7 | 0 | 71.24 | 63.89 | 160,559 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 | 381 | 692 | 3 | 26 | 4 | - | - | 415 | 1 | 155 | 82 | 1 | - | 5 | 69.65 | 69.31 | 487,021 |
| 10 | களுத்துறை | 377 | 218 | 595 | 25 | 10 | 199 | 5 | 35 | 69 | 6 | 152 | 87 | 2 | 2 | 3 | 117.21 | 73.03 | 251,030 |
| 11 | கண்டி | 569 | 998 | 1,567 | 16 | 3 | 325 | 9 | 94 | 78 | 13 | 849 | 179 | - | - | 1 | 146.95 | 141.03 | 269,619 |
| 12 | கேகாலை | 347 | 317 | 664 | 11 | 6 | 225 | 1 | 10 | 8 | 9 | 342 | 52 | | | | 96.71 | 84.00 | 37,541 |
| 13 | கிளிநொச்சி | 61 | 86 | 147 | - | 10 | 7 | - | 23 | 22 | - | 65 | 19 | - | 1 | - | 14.10 | 14.08 | 70,846 |
| 14 | குருநாகலை | 635 | 1,133 | 1,768 | 15 | 17 | 144 | 8 | 63 | 109 | 31 | 1,157 | 195 | 1 | 17 | 11 | 154.63 | 152.88 | 1,026,524 |
| 15 | மன்னார் | 130 | 166 | 296 | - | - | 2 | 2 | 5 | 2 | 1 | 182 | 102 | - | - | - | 26.45 | 24.56 | 132,103 |
| 16 | மாத்தளை | 230 | 521 | 751 | 11 | 2 | 124 | 4 | 11 | 15 | 9 | 464 | 103 | - | 8 | - | 52.15 | 49.80 | 348,991 |
